

# கலைஞர்

# திரை இசைப் பாடல்கள்



தொகுப்பாசிரியர்
சிலோன் விஜயேந்திரன்

# கலைஞர்

## திரை இசைப் பாடல்கள்

அண்ணா அறிவாலய
நூலகத்திற்கு அன்பளிப்பு
— சிலோன்
விஜயேந்திரன்
15/6/89.

தொகுப்பு
**சிலோன் விஜயேந்திரன்**

ஆய்வக
நூல்நிலையம்
சென்னை-18.

## காந்தளகம்

4, முதல்மாடி
ரசிகா கட்டடம்,
834, அண்ணாசாலை,
சென்னை-600 002.

213, காங்கேயன்துறை வீதி
யாழ்ப்பாணம்.

உரிமை பதிவு

முதற்பதிப்பு:
வைகாசி 21, திருவள்ளுவர் 2020 (03.06.89)

5464
G791.43

விலை ரூ. 5.00
அச்சிட்டோர்: காந்தளகம், சென்னை-2.

•

## தொகுப்பாசிரியர் உரை

விரிஞாலத் தமிழர்தம் நெஞ்சமெல்லாம் வீற்றிருக்கும் அருங்குணத் தலைவர் கலைஞர் யாத்த இன்னமுதத் திரைப் பாடல்களை மனோ விழைவோடு தொகுத்துச் செந்தமிழர் பார்வைக்குத் தந்துள்ளேன்.

தமது திரைப் பாடல்களைத் தொகுப்பதற்கு அனுமதி வழங்கியதோடு அமையாது பல்லாற்றானும் ஒத்துழைப்பு நல்கிய மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கட்கு யான் என்றும் கடப்பாடுடையேன்.

நூலை நவமும் நளினமும் மிளிரப் பதிப்பித்து வெளியிடும் 'காந்தளகம்' நிறுவனத்தாருக்கும், நூல் தொகுப்புக்கு உறுதுணையாயிருந்த 'பிலிம் நியுஸ்' ஆனந்தன், என் அருமை நண்பன் ஆர்.சி. பிரகாஷ், கலைஞர் அவர்களின் செயலாளர் சண்முகநாதன், நல்லன்பன் ஏஜாஸ் ஆகியோருக்கும் என் இதய நன்றி உரியது.

***சிலோன் விஜயேந்திரன்.***

# தும்பியுரை

*(டாக்டர் சிலம்பொலி சு.செல்லப்பன்)*

மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் எழுத்துலகின் இணையற்ற வேந்தராக விளங்குகின்றவர்; கவிதை, கதை, கட்டுரை, நாடகம், திரையுரை - இத்தனையும் எழுத வல்லவர் இலக்கிய உலகில் இவர் ஒருவரே எனில் மிகையன்று. இசைப் பாடல்களை இயற்றுவதிலும் கலைஞர் தன்னேரிலாத் தகைமையாளர் என்பதற்கு இந்நூல் மிகச் சிறந்த சான்றாக விளங்குகின்றது. இவருடைய உரைநடை, பாடல் இரண்டும் ஒன்றையொன்று விஞ்சும் வகையில் ஏற்றம் பெறுகின்றன. இவரிடம் எவருக்குப் பொறாமை இருக்கிறதோ இல்லையோ இவருடைய உரைநடைக்கும் பாட்டுக்கும் தப்பாத பொறாமை தமக்குள் உண்டு.

கலைஞரின் திரையிசைப் பாடல்களை யாழ்த் தமிழர் திரு.சிலோன் விசயேந்திரன், 'எழுச்சித் தமிழ்' - 'நேசத் தமிழ்' - 'பாசத் தமிழ்' - 'நகைச்சுவைத் தமிழ்' என நான்கு பெருந்தலைப்புகளில் தொகுத்தளிக்கிறார்.

சமுதாய வளர்ச்சி-மலர்ச்சி, பொருளாதார சமத்துவம் போன்றவற்றை முழங்குகிறது 'எழுச்சித் தமிழ்'; 'நேசத் தமிழில்' காதல் பாடல்கள் இணைந்து இனிக்கின்றன; தாய் 'எழுதிப் படிக்காமல் இதயமே பாட்டாய் இசைப்பது' தாலாட்டு - அத்தாயுள்ளத்தின் நேசம் 'பாசத் தமிழ்த்' தொட்டிலில் துயில்கிறது; நினைக்குந்தோறும் நெஞ்சை மலர்வித்துச் சொல்லுந்தோறும் கலகலப்பாகச் சிரிக்கச் செய்கிறது 'நகைச்சுவைத் தமிழ்'.

'நம்நாடு நம்நாடு என்று நாமெல்லோரும் கூடித் தியாகம் செய்ய வேண்டும்' என ஊட்டப்படும் நாட்டுப்பற்று, 'தாயின் மடியில் தவழ்ந்தவனே-நீ, தரைக்குள் தூங்கப் போறியா?' எனும் சோகத் திரட்சி, 'ஊற்றெடுக்கும் அறிவினாலே உலகை ஆளலாம்' என்னும் ஊக்கவுரை, 'குடியுயரக் கோலுயரும்' எனும் முந்தையோரின் இலக்கிய ஆட்சி, 'அருமை மிகுந்த எங்கள் அறிஞர் அண்ணா வாழ்கவே' எனும் தலைவர் வாழ்த்து, அனைவர்க்கும் அம்மையப்பராயுள்ள ஆண்டவன் படைப்பில் ஆயிரம் வேறுபாடுகள் ஏன்?' எனும் வினா எனப் பாடல் ஒவ்வொன்றும் சிந்தையள்ளும் செய்திக்குச் சொந்தமாய்ச் சிறக்கிறது.

'தூற்றலைக் கேட்டுத் துவளாதே' என்ற பாடலைக் கலைஞர் தன் மனதுக்குத் தானே பாடியது எனச் சொல்லத் தோன்றுகிறது.

அவள்-மாரி மகமாயி என அழைக்கப்பட்டாலும் மகமாயியின் அருளால் மாரி பொழிவதில்லை. சூரியனால் கடல் நீர் மேகமாக மாறுவதாலேயே மழை பொழிகிறது என்னும் விஞ்ஞானக் கருத்தைச் சுவையாக மகமாயியைப் பாடும் பாடலிலே புகுத்தி நயம் விளைவிக்கிறார்.

பெண்ணின் கண்கள் கயல்கள் போலத் துள்ளுவன; இதழோ தேனென இனிப்பது; அவள் தோற்றமோ மான் மிரண்டு துள்ளுவதொத்தது; அசைந்தாடும் அவளுடையள கூந்தலோ மழை போல் இருண்டது என்பதை

மீன் இரண்டு உருளுது - இதழ்த்
தேன் திரண்டு பெருகுது
மான் மிரண்டு துள்ளுது -
வான் இருண்டு அழைக்குது

என இசையாகச் சுட்டுகிறது கலைஞர் பாடல்.

'அலைகடல் ஓசை அடங்கும்வரை உனக்காகக் காத்திருப்பேன்' என்பதை விடக் காதலின் ஆழத்தை உணர்த்த வேறு தொடரைக் கூற முடியுமா?

தமிழும் தானும் 'வெண்ணிலாவும் வானும் போல' என்பார் பாவேந்தர். கலைஞரின் பாடல் தலைவன், தன் தலைவியைப் பாராட்ட,

அவள்: நீல வானே தன்னை மறந்து
நிலவினைப் புகழ்ந்திட லாமா?

எனக் கேட்கிறாள். நீலவான் - காதலன்; அதில் நீந்தித் திரியும் நிலவு - காதலி, என்பதை அருமையாக - நுணுக்கமாகத் தெரிவிக்கும் கலைஞரின் பெருந்திறன் எண்ணியெண்ணிச் சுவைக்கக் கூடியது.

அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை

எனும் திருக்குறளைப் போல கலைஞரின்

செத்துப் பிழைக்கும் மக்களுக்குச்
செகத்தை அழிக்கும் சக்தியுண்டு

எனும் வைர வரிகள் என்றும் நின்று நிலவும்.

தனி உடைமைக்குத் தடைவிதி
பொது உரிமைக்குப் போர்தொடு

என்பன போன்ற இலட்சிய நோக்குகளும்

வருமுன் காப்பவன்தான் அறிவாளி
வந்தபின்னே தவிப்பவன்தான் ஏமாளி

என்பன போன்ற தத்துவக் கருத்துகளும் படிக்குமிடந்தோறும் ஆட்சி செய்வதால் கலைஞரின் திரையிசைப் பாடல்கள் கருத்துப் பேழைகளாக - கொள்கைக் கருவூலங்களாக - தத்துவச் சுரங்கங்களாக அமைந்து சிறக்கின்றன.

'தேன்படிக்கும் அமுதான' கலைஞரின் திரைப்பாடல்கள் நம் சிந்தை அணு உடல் ஒவ்வொன்றையும் சிலிர்க்கச் செய்கின்றன; உள்ளத்தின் உள்ளே பட்டதும் உயிரை இனிக்கச் செய்யும் தெள்ளு தமிழ்த் தேன்கூடு இப்பாடல் தொகுப்பு. இதைப் படிப்போர்க்கு

பூவரிகள்; புயல்வரிகள்; கலைஞர் தந்த
புகழ்வரிகள் திரைப்பாடல் வரிகள்! காதில்
தூவிவிட்ட 'சங்கீத விதைகள்' நெஞ்சைத்
தொடுகின்ற ஒவ்வொன்றும் இனமா னத்தை
ஈவுவைத்துக் கொண்டிருக்கும்; சொற்க ளுக்கு
இசைவந்து குடைபிடிக்கும்; உச்ச ரித்த
நாவெல்லாம் கவிநயத்தில் தோயும், கேட்போர்
நரம்பெல்லாம் பகுத்தறிவு வெள்ளம் பாயும்

என்று நிச்சயம் பாடத் தோன்றும்.

— கன்னல்

பொருள்தரும் தமிழே நீஓர் பூக்காடு
நான் அங்கோர் தும்பி

என்பது பாவேந்தர் வாக்கு. கலைஞரின் திரையிசையாகிய பூக்காட்டில் நுழைந்து தேனுண்ட ஒரு தும்பி 'காமஞ் செப்பாது கண்டது மொழிந்ததே' இத்தும்பியுரை.

# உள்ளடக்கம்

## எழுச்சித்தமிழ்


| | பாடல் | படம் | பக்கம் |
|---|---|---|---|
| 1. | வெல்க நாடு வெல்கவே | காஞ்சித் தலைவன் | 1 |
| 2. | பொது நலம்... | ரங்கோன் ராதா | 3 |
| 3. | ஒரு போராளி... | ஒரே ரத்தம் | 5 |
| 4. | ஊற்றெடுக்கும்... | நாம் | 6 |
| 5. | குடி உயர | தூக்கு மேடை | 8 |
| 6. | அண்ணா வாழ்கவே... | நாம் | 10 |
| 7. | தூற்றலைக் கண்டு... | நாம் | 12 |
| 8. | அம்மையப்பா... | அம்மையப்பன் | 13 |
| 9. | மாரி மகமாயி... | நாம் | 15 |
| 10. | சுருளு மீசை... | வீரன் வேலுத் தம்பி | 16 |
| 11. | நெஞ்சுக்கு... | நெஞ்சுக்கு நீதி | 18 |
| 12. | ஆற அமர... | மக்கள் ஆணையிட்டால் | 20 |
| 13. | புதியதோர்... | நாம் | 22 |
| 14. | வாழ்க்கை எனும்... | பூம்புகார் | 23 |
| 15. | ஊருக்கு... | மந்திரி குமாரி | 24 |


## நேசத்தமிழ்


| | | | |
|---|---|---|---|
| 16. | இல் வாழ்வினிலே | பராசக்தி | 26 |
| 17. | கன்னம் கன்னம்... | பூமாலை | 27 |
| 18. | அலையிருக்குது... | குறவஞ்சி | 28 |
| 19. | மணிப்புறா... | ராஜா ராணி | 29 |
| 20. | வேலையில்லாத... | ராஜா ராணி | 30 |
| 21. | ஆயிரம் பிறைகள்... | தூக்கு மேடை | 31 |
| 22. | ஆழி சூழ்... | ராஜா ராணி | 32 |
| 23. | காதல் புறா | அம்மையப்பன் | 33 |
| 24. | பேசும் யாழே... | நாம் | 34 |
| 25. | மணமில்லா... | நாம் | 35 |

| | | | |
|---|---|---|---|
| 26. | குறிஞ்சி... | தூக்கு மேடை | 36 |
| 27. | ஓடையிலே... | ரங்கோன் ராதா | 37 |
| 28. | ஆயர்பாடி... | ரங்கோன் ராதா | 38 |
| 29. | மீளாத சோகம்... | நாம் | 39 |
| 30. | ஒண்ணு கொடுத்தா... | மறக்க முடியுமா | 40 |
| 31. | வான் மலர்ச் சோலையில் | ரங்கோன் ராதா | 41 |


## பாசத் தமிழ்


| | | | |
|---|---|---|---|
| 32. | காகித ஓடம்... | மறக்க முடியுமா | 42 |
| 33. | பூமாலை... | மறக்க முடியுமா | 43 |
| 34. | தமிழே... | ரங்கோன் ராதா | 44 |
| 35. | சின்னப்புது... | அம்மையப்பன் | 45 |
| 36. | நீலக்கடல்... | அம்மையப்பன் | 46 |


## நகைச்சுவைத் தமிழ்


| | | | |
|---|---|---|---|
| 37. | வாங்க வாங்க. . | ராஜா ராணி | 47 |
| 38. | வருவாய்... | நாம் | 49 |
| 39. | லீலா... | ராஜா ராணி | 50 |
| 40. | நீர் மேல்... | காஞ்சித் தலைவன் | 52 |

ஆய்வக
நூல்நிலையம்
சென்னை-18.

# எழுச்சித் தமிழ்

## 1. வெல்க நாடு வெல்க!

வெல்க நாடு வெல்க நாடு வெல்க வெல்கவே
வீர சங்க நாதங்கேட்டுச் செல்க செல்கவே (வெல்க)

தாயின் ஆணை கேட்பதற்குத் தலைவணங்கும் தங்கமே
தலை கொடுத்துத் தாயின் மானம் காத்திடுவாய் சிங்கமே
சென்று வா வென்று வா (வெல்க)

குழலைப் போல மழலை பேசும்
குழந்தைகளின் முத்தமும்
கொஞ்சுகின்ற அஞ்சுகத்தின்
கோல மொழிச் சத்தமும்
உன் குன்றத் தோளில் புது பலத்தை
வழங்குமடா நித்தமும் (வெல்க)

மதிமை கொண்ட மண்ணின் மீது எதிரிகளின் கால்கள்
மலர் பறிப்பதில்லையடா வீரர்களின் கைகள்
மாவீரர்களின் கைகள்
சென்று வா வென்று வா (வெல்க)

ஓங்கிய வாள் போன்ற வடிவமடா - அவர்
ஒளிவிழியில் உலகத்தின் படிவமடா
வேங்கைப்புலி மன்னனடா
வீரர்களின் தலைவனடா - அவர்
கட்டளைக்கு காத்திருந்த நல்லவனே
களம் நோக்கிப் புறப்படடா வல்லவனே (வெல்க)

ஆண்டு: *1963*; படம்: காஞ்சித் தலைவன்; இசை: கே.வி. மகாதேவன், பாடியவர்: இசைச்சித்தர் சிதம்பரம் ஜெயராமன்.

தாய் மண்காக்கப் போராடிய - போராடுகிற இனமான வீரர்க்குப் புத்தூக்கம் தரும் வண்ணம் பாடலை இயற்றி உள்ளார் கலைஞர்.

''தாயின் ஆணை கேட்பதற்குத் தலைவணங்கும் தங்கமே
தலை கொடுத்துத் தாயின் மானம் காத்திடுவாய் சிங்கமே''
என்ற அடிகளும்,

''மகிமை கொண்ட மண்ணின் மீது எதிரிகளின் கால்கள்
மலர்ப் பறிப்பதில்லையடா வீரர்களின் கைகள்''
என்ற அடிகளும் தமிழினத் தலைவரின் சிந்தைக் கனவின் சித்திர மாகும்.

## 2. பொது நலம் என்றும் பொது நலம்

பொது நலம் என்றும் பொது நலம்
புகழ் உடலைக் காக்கும் மிகப் புனிதமான செயல்
பொது நலம் என்றும் பொது நலம்
வீடுவாசல் மாடுமனை மக்கள் சுற்றம் போனாலும்
நாடு நம்நாடு நம்நாடு நாடென்று
நாமெல்லோரும் கூடிச் செய்யும் தியாகமே (பொது)

நாட்டிலே எதுக்கும் லாயக்கில்லாமல்
வீட்டிலே எதுவும் வேலை செய்யாமல் உடல்
கூட்டிலே தீனியை அடைத்து வாழும்
உருப்படா மனிதனுக்குயிர் கொடுக்கும்
மருந்து நல்ல மருந்து (பொது)

திண்ணை தூங்கிப் பண்டாரம்
திருவோடேந்தும் பரதேசி
தெருவிலே உருளும் திருப்பதி கோவிந்தா கோவிந்தா
இந்த சோம்பேறி நடைப் பிணத்துக்குயிர்
கொடுக்கும் மருந்து (பொது)

நெற்றியிலே விழுகின்ற கோடுகளை
முதுமைக் கோடுகளை
புத்தியிலே விளைகின்ற கேடுகளை
கச்சிதமாய் அகற்றிடும் கைகண்ட மருந்து - நல்ல மருந்து

அறிவுக் கோயில் வழிபாடு
உழைக்கும் தோழர் பண்பாடு
அறநெறியோடு அன்புடன் வாழ்வோமே வாழ்வோமே
இந்த மேலான கடமைகளுக்கு
ஒளி கொடுக்கும் மருந்து (பொது)

**ஆண்டு:** *1956;* **படம்:** *'ரங்கோன் ராதா';* **இசை:** *டி.ஆர். பாப்பா;* **பாடியவர்:** *சி.எஸ். ஜெயராமன்.*

மக்களுள் பதராய் வாழ்வோரையும், வீணில் உண்டு கொழுத்திருப் போரையும் தட்டி எழுப்பி, அவர் தம் சமுதாயக் கடனை வலியுறுத்தும் வண்ணம் அமைந்துள்ளது கலைஞரின் 'பொது நலம்' பாடல். கவிஞர் கம்பதாசன், பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் போல் கலைஞர் மு.க. வும் சமூக முன்னேற்றச் சிந்தனைகளை திரைப்படப் பாடல் களில் கையாண்டவர் என்பதற்கு இப்பாடல் ஓர் உயர்ந்த எடுத்துக் காட்டாகும்.

## 3. ஒரு போராளியின் பயணம்...

ஒரு போராளியின் பயணமிது - அவன்
போராடிப் பெற்ற பரிசு இது!
ஓய்வில்லாமல் உழைத்தவனே - நீ
ஓய்வு கொள்ளப் போறியா?

தாயின் மடியில் தவழ்ந்தவனே - நீ
தரைக்குள் தூங்கப் போறியா?
இளைஞர்களை எழுப்ப வந்த குட்டிச் சிங்கமே
இளஞ் சூரியனாய் ஒளி வீசிய கட்டித் தங்கமே
கொலை வெறியர் ஜாதி பேதக் கத்தி தூக்கினாரே
கொள்கைக்காக வாழ்ந்த உந்தன் உயிரைப் போக்கினாரே!

ஏசு, புத்தன், நபிகள், காந்தி காட்டும் வழியிலே
பேசும் புயல் பெரியார், அண்ணா,
அம்பேத்கார் மொழியிலே
முழங்கி நடந்த குல விளக்கு நீயடா உன்
கொடி நிழலில் என்றும் நாங்கள் கூடுவோம் பாரடா!

***ஆண்டு:*** *1988;* ***படம்:*** *'ஒரே ரத்தம்';* ***இசை:*** *தேவேந்திரன்;* ***பாடியவர்:*** *மலேசியா வாசுதேவன்.*

## 4. ஊற்றெடுக்கும் அறிவினாலே...

புதியதோர் பாதையை வகுப்போம் நாம் - கெட்ட
போரிடும் பாதையை சாய்ப்போம் நாம்
நித்தம் உழைத்தே உயர்வோம் நாம்
நெறி தவறாமல் வாழ்வோம் நாம்

அஞ்ஞானப் பாழ்வெளியையே - நல்
அறிவாகும் ஏர் முனையினால்
அஞ்ஞானப் பாழ் வெளியையே - நல்
அறிவாகும் ஏர் முனையினால்...
அறிவாகும் ஏர் முனையினால்...

விஞ்ஞானப் பேரறிவினால் - உழுதே
மெய்ஞ்ஞானம் காண்பவர்கள் நாம்!
விஞ்ஞானப் பேரறிவினால் - உழுதே
மெய்ஞ்ஞானம் காண்பவர்கள் நாம்!

ஏற்றங் கொண்டு வாழ்வோம் நாம் - கால
மாற்றத்தோடு மாறுவோம் நாம்,
மாற்றத்தோடு மாறுவோம் நாம்.

ஊற்றெடுக்கும் அறிவினாலே - புதிய
கருவி கொண்டு ஆளுவோம் - நாம்
ஊற்றெடுக்கும் அறிவினாலே - புதிய
கருவி கொண்டு ஆளுவோம் நாம்.

நாத்து நடுவோம் - களை
பேத்து எறிவோம்!
நாத்து நடுவோம் - களை
பேத்து எறிவோம்!...

காத்து வளர்ப்போம் - கதிர்
கண்டு மகிழ்வோம் - கதிர்
கண்டு மகிழ்வோம்.

**ஆண்டு:** *1953;* **படம்:** 'நாம்'; ● **இசை:** *சிதம்பரம் ஜெயராமன்;* **பாடியவர்:** *சிதம்பரம் ஜெயராமன்.*

## 5. குடி உயர...

குடி உயரக் கோல் உயரும்
கோல் உயரக் கொடி உயரும்

ஆகா எத்தனை அழகாய்
எத்தனை வளமாய்
எங்கள் மக்கள் சாகிறார்
எரியும் நெருப்பில் வேகிறார்

எல்லாரும் இந் நாட்டு
மன்னர் என்றார் பாட்டிலே
எங்கள் மக்கள் வாழ்கிறார்
மண்ணாங் கட்டி வீட்டிலே

இடி இடித்தால் மழை பொழிந்தால்
மக்கள் எல்லாம் ரோட்டிலே
ஐயோ! ஐயோ! (எல்லாரும்)

சிறகொடிந்த பறவை கூட
இருக்குதய்யா கூட்டிலே

எங்களுக்கும் உணர்ச்சி உண்டு
எங்க பங்களாவில் மெத்தையுண்டு
புளிச்ச காடி மதுவை உண்டு
புருஷன் மனைவி சேர்வதுண்டு
வெளிச்சம் போட்ட காரு வந்தா
விலகி விலகிப் படுப்பதுண்டு (குடி)

முத்தெல்லாம் மூக்குச் சளி
இரத்தக்காயம் இரத்தினமாம்
வைரங்கள் நட்சத்திரம்
வானவில்லே வைடூரியம்

குத்துக்கல் சிம்மாசனம்
குப்பைத் தொட்டி ராஜாங்கம்
செத்துப் பிழைக்கும் மக்களுக்குச்
செகத்தை அழிக்கும் சக்தியுண்டு (கொடி)

**ஆண்டு:** 1982; **படம்:** 'தூக்கு மேடை'; **இசை:** சங்கர்-கணேஷ்; **பாடியவர்:** மலேசியா வாசுதேவன்.

''ஆகா, எத்தனை அழகாய் எத்தனை வளமாய்
எங்கள் மக்கள் சாகிறார்
எரியும் நெருப்பில் வேகிறார்'' என்ற வரிகளிலும்

''புளிச்ச காடி மதுவை உண்டு புருஷன் மனைவி சேர்வதுண்டு
வெளிச்சம் போட்ட காரு வந்தா விலகி விலகி படுப்பதுண்டு''
என்ற வரிகளிலும், தமது இதய ஆவேசத்தை இயல்பாக - யதார்த்த மாக வெளிப்படுத்துகிறார் கலைஞர்.

இறுதியாக —

''செத்துப் பிழைக்கும் மக்களுக்குச்
செகத்தை அழிக்கும் சக்தியுண்டு''
— என பாடலை முடிப்பது கலைஞரின் பாத்திறனை பறை சாற்றுகிறது.

## 6. அண்ணா வாழ்கவே!

வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
அருமை மிகுந்த எங்கள் அறிஞர்
அண்ணா வாழ்கவே
குமர அண்ணா வாழ்கவே

பெருமை பேசும் மனிதரெல்லாம்
எதற்கெடுத்தாலும் எருமை போல
தலையசைப்பதை உரிமைக்காக
எதிர்த்து நிற்கும்

அண்ணா வாழ்கவே
எங்கள் அண்ணா வாழ்கவே

புழுவாகத் துடிக்கின்ற ஏழை
கழுகாகப் பறக்கின்ற சீமான் இந்தப்
பொல்லாத பேதங்கள் எல்லாம்
இல்லாத பொன்னாடாய்ச் செய்தார் அந்த

அண்ணா வாழ்கவே
குமர அண்ணா வாழ்கவே

எலியாக வாழ்கின்ற விதவை
பலியாகத் தருகின்ற இளமை
புலியாகப் பாய்கின்ற பழமை
மலிவாகப் போன கொடுமை
மாற்றிடும் அண்ணா வாழ்கவே
குமர அண்ணா வாழ்கவே

சில சில இடங்களில் பணத்தோட்டம் — அது
செல்வக் குமரிக் கோட்டம் இப்படிப்
பல பல கருத்துகள் சொல்லும் தேனாறு
பகுத்தறிவூட்டும் லட்சிய வரலாறு
அண்ணா வாழ்கவே
எங்கள் அண்ணா வாழ்கவே

**ஆண்டு:** *1953;* **படம்:** *'நாம்';* **இசை:** *சிதம்பரம் ஜெயராமன்;* **பாடியவர்:** *சிதம்பரம் ஜெயராமன்.*

•

## 7. தூற்றலைக் கேட்டுத் துவளாதே!

எதையும் தாங்கும் இதயம் வேண்டும்
பகையும் பழியும் பாம்பெனத் தீண்டும் - உலகில்
எதையும் தாங்கும் இதயம் வேண்டும்
சிறையா வதையா இன்னும் (எதையும்)

சாக்ரட்டீஸ் வாழ்வினைப் பார்
சாகாத காந்தி முடிவையுமே பார்
வேதனையாலே வீழாதே
சோதனையாலே வாடாதே - நீ வாடாதே
சோதனையாலே வாடாதே - வரும் (எதையும்)

தேனெனும் வாழ்வே தேளாய் மாறும்
போர்முனைச் சாவே பொது வாழ்வில் இன்பம்
ஆணவம் சீறலாம், ராணுவம் பாயலாம்
சீற்றத்தைக் கண்டு சிதறாதே - உளம் சிதறாதே
தூற்றலைக் கேட்டுத் துவளாதே - பகை (எதையும்)

*ஆண்டு: 1953; படம்: 'நாம்'; இசை: சிதம்பரம் ஜெயராமன்; பாடியவர்: சிதம்பரம் ஜெயராமன்.*

*தமிழின மேம்பாட்டையே தமது ஜீவித லட்சியமாகக் கொண்ட கலைஞரின் இலட்சியப் பணிக்குப் பொருத்தமாக இப்பாடல் அமைந்துள்ளது. 'சீற்றத்தைக் கண்டு சிதறாமலும்' தோல்வியைக் கண்டு துவளாமலும் தொடர்ந்து செல்லும் மனத்திண்மை மிக்கவரன்றோ நம் கலைஞர்!*

## 8. அம்மையப்பா...

அம்மையப்பா அருள்புரிவாய் எல்லாம்
உன்செயல் அம்மையப்பா•
எல்லாம் உன் செயல் அம்மையப்பா
அம்மையப்பா அருள்புரிவாய் எல்லாம்
உன் செயல் அம்மையப்பா

இம்மை மறுமை இன்பம் துன்பம்
உண்மை பொய்ம்மை உலகு பந்தம்
எல்லாம் உன்செயல் அம்மையப்பா
தேளின் விஷம், தெள்ளமுது, தேனருவி, தீக்காடு,
ஏரிகுளம், எரிமலைகள் எல்லாம்
உன்செயல் அம்மையப்பா

அரசன் முதல் ஆண்டிகளும்
ஐயன் சிருஷ்டி உண்மையப்பா
இது ஐயன் சிருஷ்டி உண்மையப்பா
பல்லக்குத் தூக்கிகளும் அதில்
பவனி வருகின்ற மனிதர்களும்
அம்மையப்பா உந்தன் எல்லைக்குள்
வாழ்வோர் உண்மையப்பா

கல்லுக்குள் தேரையும் எள்ளுக்குள் எண்ணெயும்
பாம்பின் பல்லுக்குள் கொடு நஞ்சும்
அம்மையப்பா தொல்லுலகம் உந்தன்
செயல் தானென்று சொல்லுதப்பா.

மேற்காணும் அரிய பாடலிற் கலைஞர், சமதிருஷ்டி உடையவன் எனப்படும் இறைவன் சிருஷ்டியிலே காணப்படும் வெறுக்கத்தக்க

வேறுபாடுகளை மிக நளினமாகக் கண்டிக்கிறார்.

பொருளாதார ஏற்றத்தாழ்வில்லாத சமத்துவ சமுதாயம் அமைய வேண்டியதின் அவசியத்தை இப்பாடல் தெளிவாக உணர்த்துகிறது.

***ஆண்டு:*** *1954;* ***படம்:*** *'அம்மை யப்பன்';* ***இசை:*** *டி.ஆர். பாப்பா;* ***பாடியவர்:*** *சீர்காழி கோவிந்தராஜன்.*

## 9. மாரி மகமாயி

குழுவினர்: மாரி மகமாயி மாரி மகமாயி
ஆயி எங்கள் காளியம்மா
மாரி மகமாயி மாரி மகமாயி

அவன்: சூரியனுல் கடல் நீரும் - மேகமாகவே
மாறியதால் லோகத்திலே
மழையும் பொழியுமாம்!

அவள்: சொல்றேன் கேளு
விஞ்ஞானம் புதிதாய் மாறுதுபாராய்
கொடும்பாவி அருளாலே பேயுமாம்
ஜோராய்
மானம் காஞ்சா நாமெல்லோரும்
வாடிடுவோம் தல்லாலேலா...

அனைவரும்: திரிசூலி நீலி எங்கள் மாரி மகமாயி
பசிபொறுக்க முடியாமல்
வாடுகிறோம் தாயே
ஓங்கார ரூபினி மாரி மகமாயி
எங்கள் குறை தீர்த்து விடு மாரி மகமாயி
(மாரி)

மேற்காணும் மகமாயி பாடலை நாசுக்காகப் பகுத்தறிவுக் கொள்கைகளைத் தூவி கலைஞர் யாத்துள்ளார்.

**ஆண்டு:** *1953;* **படம்:** 'நாம்'; **இசை:** சிதம்பரம் ஜெயராமன்.

## 10. சுருளு மீசைக் காரனடி..

சுருளு மீசைக்காரனடி வேலுத் தம்பி
சூராதி சூரனடி வேலுத்தம்பி
சூரியனில நெருப்பெடுப்பான்
சூழ்ச்சிகளைக் கொளுத்திடுவான்

எரிமலையில் அடுப்பெரிப்பான்
ஏழையர்க்கு உண வளிப்பான்
எங்கள் குல தெய்வ மாவான்
தங்கக் குண சிங்கமாவான்.

பூகம்ப மேடையிலே
புரட்சி கீதம் பாடிடுவான்
பொல்லாதோர் பகையெல்லாம்
பொடிப் பொடியாய் ஆக்கிடுவான்

கும்மியடி பெண்ணே கும்மியடி
குரவை போட்டு கும்மியடி
கடமைக்குத்தான் உயிர் கொடுப்பான்
கண்ணியத்தை காத்து நிற்பான்.

தம்பியிருந்தா படைக்குப் பயமில்ல - இந்த
தத்துவத்தைத் தான் மறந்து போனதில்லே
தனி உடமைக்குத் தடை விதித்து
பொது உரிமைக்குப் போர் தொடுத்து
தும்பியைப் போல் பறந்து சென்று
துன்பங்களைத் தீர்த்து வைப்பான்!

'சூரியனில் நெருப்பெடுப்பான்'
என்ற வரிகளிலும்
'எரிமலையில் அடுப்பெரிப்பான்'
என்ற வரிகளிலும்
கவித்திறன் பொங்கி வழிகிறது.

'தனி உடைமைக்குத் தடை விதித்து
பொது உரிமைக்குப் போர் தொடுத்து'
என வரும் பகுதி கலைஞரின் ஆத்ம லட்சியத்தைப் பளிங்கு போல் உணர்த்துகிறது.

**ஆண்டு:** 1988; **படம்:** 'வீரன் வேலுத்தம்பி'; **இசை:** எஸ்.ஏ. ராஜ் குமார்; **பாடியவர்:** மலேசியா வாசுதேவன்.

## 11. நெஞ்சுக்கு...

நெஞ்சுக்கு நீதியும்
தோளுக்கு வாளும் - நிறைந்த சுடர்மணிப்பூண்
பஞ்சுக்கு நேர்
பல துன்பங்க ளெல்லாம்
உன் பார்வைக்கு நேர் பெரும் தீ
வஞ்சனையின்றி பகையின்றி சூதின்றி
வையக மாந்தரெல்லாம் வாழ்வதற்கே
கவி பாரதி பாடிய நீதி
வாய்மைசேர் நெஞ்சுக்கு நீதி

ஒருவரைப் பற்றிக் குறைகூறும் முன்னாலே உன்
முதுகைக் கொஞ்சம் திரும்பிப் பாரு பின்னாலே

உத்தமர்கள் அறிவுரையை
உதட்டளவில் நிறுத்தாமல்
உள்ளத்தில் பதித்திடுவாய் அண்ணே
சிந்தனைச் செம்மல்கள்
காட்டிய நெறிகளைச்
செயல்களாய் குவித்திடு அண்ணே (ஒருவரை)

சாதி மதங்களைச் சாய்ப்போம் என்று
புத்தர் காந்தி போதனை புரிந்தார்
ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண
அறிஞர் அண்ணா இங்கே பிறந்தார்
கடமையைச் செய்வோம் உரிமையைப் பெறுவோம்
மடமையை மாய்த்திடுவோம்
மனிதராய் வாழ்ந்திடுவோம் (ஒருவரை)

ஊழல் ஊழல் என்று தினம் பாடினாயே பாட்டு
உன் முகத்தை நீயே ஒரு கண்ணாடியில் காட்டு
வீண் பழி போடும் வேலை உனக்கு ஆகாது டாங்கப்பா
— பெரும்

தூண் ஒன்று உன் தலையில் வீழுமப்பா (ஒருவரை)

எதிரிகளைக் கண்டு கலைஞர் எஞ்ஞான்றும் கலங்கியது கிடையாது. கண்ணாடி வீட்டிலிருந்து கொண்டு கல்லெறியும் தமது எதிர்ப்பாளர்கள் தத்தம் தவறுகளை திருத்திக் கொள்ள முன்வராது வீண்பழி போடுவதை மேற்காணும் பாடலில் நயமாகச் சாடுகிறார் கலைஞர்.

**ஆண்டு:** *1979;* **படம்:** 'நெஞ்சுக்கு நீதி' **பாடலைப் பாடியவர்:** டி.எம்.எஸ். **இசை:** சங்கர் கணேஷ்.

## 12. ஆற அமரக் கொஞ்சம்...

ஆற அமரக் கொஞ்சம் யோசிச்சுப்பாரு - நீ
அடுத்து வரும் தலைமுறையைச் சிந்திச்சுப் பாரு
ஏற இறங்கப் பார்த்து எடைகளை போடு - நீ
எத்தனுக்கும் பித்தனுக்கும் தடைகளைப் போடு

ஓட்டுக்கு உன்னிடத்தில் வருபவன் யாரு
உழைப்பவனா ஊரை ஏய்ப்பவனா
தேர்தல் களத்திலே நிற்பவன் யாரு
தியாகம் செஞ்சவனா மோசம் செஞ்சவனா
ஓட்டுக்குப் பணம் கொடுக்கும்
　உலுத்தர்களை நம்பாதப்பா

நாட்டுக்கு உயிர்கொடுக்கும்
　நல்லவரைத் தள்ளாதேப்பா
வஞ்சகப் பேய்களை விரட்டணுமே - ஏழை
துன்பம் தீர்ப்பவன் ஜெயிக்கணுமே (ஆற)

கொள்கை இல்லாத கொடியவன் யாரு
கொடுமைக்குப் பணியா வீரனும் யாரு
ஊழல் புரிஞ்சு வாழும் மனுசனும் யாரு
அதை ஊருக்குச் சொல்லும் உயர்ந்தவன் யாரு
உறவுக்குக் கரங்கொடுப்பான்
　உங்க வீட்டுப் பிள்ளையப்பா
உரிமைக்குக் குரல் கொடுப்பான்
　தென் பாண்டிச் சிங்கமப்பா
உதயக் கதிரும் தான் உதிக்குது பாரு
உடன் பிறப்பே நீ ஒன்றாகச் சேரு.

நீண்டகாலமாக 'மாயக் கவர்ச்சி'யில் ஆழ்ந்து போய் அசலுக்கும் நகலுக்கும் பேதந் தெரியாது திசைமாறிப் போன தமிழகத்து மக்களுக்கு புத்துணர்ச்சியைத் தூண்டி அவர்தம் வாழ்வில் 'விழிப்பின் விளக்கை' ஏற்ற எண்ணும் கலைஞரின் அப்பழுக்கற்ற இதய வேட்கையை இப்பாடல் இனிதே இனங்காட்டுகிறது.

***ஆண்டு:*** *1988;* ***படம்:*** *'மக்கள் ஆணையிட்டால்'* ***இசை:*** *எஸ்.ஏ. ராஜ்குமார்* ***பாடியவர்:*** *மலேசியா வாசுதேவன்.*

•

## *13. புதியதோர் பாதை வகுத்தோம்!*

சொப்பனத்தில் வந்த கடவுளின் அருளால்
பயிர் வளர்த்தாராம் நந்தனார்...
எப்பொழுதும் போல் கை கால்களுதவியால்
பயிர் வளர்த்தோமே இந்த நாள்.

வளைந்த கதிரில் விளைந்து வந்தாய் தங்க ராணியே
வாழ்வில் இன்பம் பொங்கிட
வந்தாய் எங்கள் தோழியே

''பொதுக் களஞ்சியம் கண்டோம் நாம்
புதியதோர் பாதை வகுத்தோம்''.

**ஆண்டு:** *1953;* **படம்:** *'நாம்';* **இசை:** *சிதம்பரம் ஜெயராமன்*

## 14. வாழ்க்கை எனும் ஓடம்...

ஒருவனுக்கு ஒருத்தி என்ற உயிர் மூச்சை உள்ளடக்கி
'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பதில்லாயின் நன்று' - எனும்
திருக்குறளை மறவாதே திசைமாறிப் போகாதே

வாழ்க்கை எனும் ஓடம் வழங்குகின்ற பாடம்
மானிடர் மனதிலே மறக்க வொண்ணா வேதம்
(வாழ்)

வாலிபம் என்பது கலைகின்ற வேடம் - அதில்
வந்தது வரட்டும் என்பவன் முழு மூடம்
வருமுன் காப்பவன்தான் அறிவாளி - புயல்
வருமுன் காப்பவன் தான் அறிவாளி
வந்த பின்னே தவிப்பவன் தான் ஏமாளி
(வாழ்)

**ஆண்டு:** *1963;* **படம்:** 'பூம்புகார்'; **இசை:** கே.வி. மகாதேவன்
**பாடியவர்:** இசையரசி கே.பி. சுந்தராம்பாள்

## 15. ஊருக்கு உழைப்பவன்...

ஊருக்கு உழைப்பவன்டி
ஒரு குற்றம் அறியானடி
உதைபட்டுச் சாவானடி

- எருமைக் கண்ணுக் குட்டி

நல்லதுக்குக் காலமில்லே
நடப்பதெல்லாம் வெளிப்பகட்டு
சொல்லப் போனால் வெட்கக்கேடு

- எருமைக் கண்ணுக் குட்டி

ஏச்சுப் பொழைக்கிறவன்
ஏழடுக்கு மாளிகையில்
எகத்தாளம் போடுறானே
அவன் பேச்சை மறுக்கிறவன்
பிச்சை எடுக்கிறானே

- எருமைக் கண்ணுக் குட்டி

நாட்டுக்குத் தலைவனென்று நம்பும்படி பேசி விட்டு
வேண செல்வம் வாரியே போவாரடி
நாடு செழிக்க எண்ணி நாளெல்லாம் பாடு படும்
ஏழைக்குக் காலமில்லே எவனெவனோ வாழுகின்றான்

- எருமைக் கண்ணுக் குட்டி

மேற்காணும் பாடலில் சாக்கடைச் சமுதாயத்திலே மிதிபடும் நீதிக்காகவும், வறுமைத் தீயில் மெழுகாய் உருகும் ஏழைகளுக்காகவும் கலைஞர் போர்க் குரல் எழுப்புகிறார்.

உழைப்பவன் வாட உழைப்பை உறிஞ்சிடும் மாந்தர் உயர்ந்திடும் இயல்பினைப் பட்டவர்த்தனமாக இனங் காட்டுகிறது இப்பாடல்.

கலைஞர் எழுதிய முதற் திரைப்படப் பாடலான இது அந்த நாளில் பட்டி தொட்டி எங்கும் முழங்கிய பாங்கான பாடலாகும்.

***ஆண்டு: 1950; படம்:*** *'மந்திரி குமாரி' **இசை:** இசை மேதை ஜி. ராமநாதன். **பாடியவர்:** சுப்பையா.*

## 16. இல்வாழ்வினிலே...

அவன் : இல்வாழ்வினிலே ஒளி ஏற்றும் தீபம்
என் இதயராணி ரூபம்.

அவள் : இந்த தீபத்திலே சுடராய்
திகழ்வதென் தீரனின் ரூபம்

அவன்: இளமாமயில் ரூபம்.

அவள்: இல்வாழ்வினிலே ஒளிஏற்றும் தீபம்
நம் காதல் தீபம்

அவன்: கனியே கன்னல் தமிழே! அமுதே!
பனி தூங்கும் மலரே! நிலவே!

அவள் : கனிவான மொழியால் எனையே
கவர்ந்தீரே காந்தச் சிலையே

அவன்: உனைக் காணும் போது நெஞ்சில்
ஊறிடும் உணர்ச்சி தனையே
எழுதவோர் எழுத்து மில்லையே

இருவரும் : திருநாளிது போல் தினம் ஆடிப் பாடியே
தேன் போல் வாழ்வோம்.

**ஆண்டு:** *1952;* **படம்:** *'பராசக்தி';* **இசை:** *ஆர். சுதர்சனம்;* **பாடியவர்கள்:** *உசேன் - டி.எஸ். பகவதி.*

## 17. கன்னம் கன்னம்...

கன்னம் கன்னம் கன்னம் - சந்தனக்
கிண்ணம் கிண்ணம் கிண்ணம் என்
வண்ணம் வண்ணம் வண்ணம் - காதல்
சின்னம் சின்னம் சின்னம்

(கன்னம்)

வாலிப விருந்து வழங்குவேன் அருந்து
ஆயிரம் சாகசம் இருக்குது கைவசம்
வலிய வருகுது பறவை
வளர்க்கப் போகுது உறவை
நிலவு எரிக்குது நெருப்பாய்
நீயும் தழுவி அணைப்பாய்

பார்வையில் மயக்கம் பாவையென் பக்கம்
பழம்போல் மேனி பார்த்ததும் ஏன் தயக்கம்
மீன் இரண்டு உருளுது - இதழ்த்
தேன் திரண்டு பெருகுது
மான் மிரண்டு துள்ளுது
வான் இருண்டு அழைக்குது

(கன்னம்)

ஆண்டு: 1965; படம்: 'பூமாலை'; இசை: ஆர். சுதர்சனம்; பாடியவர்: எல்.ஆர். ஈஸ்வரி.

## 18. அலையிருக்குது...

அலையிருக்குது கடலிலே
அசைவிருக்குது உடலிலே
கலையிருக்குது நெளிவிலே
விலையிருக்குதா உலகிலே - எனக்கு
விலையிருக்குதா உலகிலே?

(அலை)

வலையிருக்குது விழியிலே - பழக்
குலையிருக்குது மொழியிலே
சிலை யிருக்குது எதிரிலே
விலை யிருக்குதா உலகிலே - எனக்கு
விலையிருக்குதா உலகிலே?

(அலை)

தளுக்கு நடையில் மினுக்கும் இடையில்
துடிக்கும் இளமை தொடுக்கும் கணையில்
ஜொலிக்கும் வாழ்வில் இனிமை தவழப்
படிக்கும் இன்பக் கவிதைகள் நாம்!

(அலை)

ஆண்டு: *1960;* படம்: *குறவஞ்சி;* இசை: *டி.ஆர். பாப்பா;* பாடியவர்: *ஜமுனாராணி*

## 19. மணிப்புறா! புது மணிப்புறா!

மணிப்புறா!
புது மணிப்புறா! புத்தம்
புது மணிப்புறா! நானே தான்
(மணி)

மேவிடும் அன்பால்
தாவிடும் உன்பால் நெஞ்சம்
பூ விரித்து அழைக்குது மஞ்சம்
பூமானே வாராய் கொஞ்சம்
(மணி)

ரோஜாக் கொல்லை முல்லைத் தோட்டம்
எந்தன் முகந்தானே...
ராஜா உமக்கு நான் தான் ராணி
தருவேன் சுகந்தானே!
(மணி)

**ஆண்டு:** 1956; **படம்:** 'ராஜா ராணி'; **இசை:** டி.ஆர். பாப்பா
**பாடியவர்:** எம்.எல். வசந்த குமாரி.

## 20. வேலையில்லா...

வேலையில்லாத தொல்லை
காலை பனிபோலே நீங்கிப் போனதே
நான் எண்ணாத நல்வாழ்வுதான்
தன்னால் வந்து சேர்ந்ததே!

இன்ப நன்னாளிதே
செல்வப் பொன்னாளிதே
ஆஹா ஆனந்தம் ஆனந்தமே
முன்பின் அறியாதார் உறவால் என் மனம் போலவே
நலமே நானடைந்தேன்

அன்பின் உருவாகவே
எந்தன் துயர் தீரவே
நன்மை தந்திட வந்தார் இன்றே
என்னை சீமாட்டி என்றெண்ணி ஏமாந்தாரே
ஆஹா விந்தையிதே...

**ஆண்டு:** *1956;* **படம்:** 'ராஜா ராணி' **இசை:** டி.ஆர். பாப்பா; **பாடியவர்:** எம்.எல். வசந்த குமாரி.

## 21. ஆயிரம் பிறைகள்...

ஆயிரம் பிறைகள் காணும் வரை
அலைகடல் ஓசை அடங்கும் வரை
தனியே உனக்காக - நீ
தனியே எனக்காக
காத்திருப்பேன் நான் காத்திருப்பேன்
(ஆயிரம்)

கதிரவன் ஊர்வலம் நிற்கும் வரை
கனிவளம் உலகில் வற்றும் வரை
பொதிகைத் தென்றல் தூங்கும் வரை
தனியே உனக்காக - நீ
தனியே எனக்காக
(ஆயிரம்)

இயற்கை வளங்கள் இருக்கும் வரை
இலக்கியச் செல்வம் வாழும் வரை
இளமை அழகு தீரும் வரை
முதுமை உடலில் பாயும் வரை
தனியே உனக்காக நீ
தனியே எனக்காக
(ஆயிரம்)

*காதலின் மகாசக்தியை மேற்காணும் பாடலில் மகோன்னதச் சொற் சித்திரமாகத் தீட்டியுள்ளார் கலைஞர்.*

***ஆண்டு:*** *1982;* ***படம்:*** *'தூக்கு மேடை';* ***இசை:*** *சங்கர் கணேஷ்;* ***பாடியவர்:*** *வாணி ஜெயராம்.*

## 22. ஆழி சூழ் உலகம்...

ஆழிசூழ் உலகம் விடிந்த தென்று - என்
ஆருயிர் மணவாளரை எழுப்பிவிட்டு
கோழிபோல் கொக்கரித்து என் கற்பையும்
கொத்திவிட்டாய் கொடியவனே! படுபாவி!
ஊழிபோல் வந்திங்கு ஆடிவிட்டாய் உடைந்த
தாழிபோல் ஆகிவிட்டேன் - இனி
ஒரு கணம் இந்த உயிர் நில்லுமோ
கற்புக்கு இலக்கணம் சொல்லுமோ சொல்லுமோ
எந்தன் உயிர் நில்லுமோ...

**ஆண்டு:** *1956;* **படம்:** *'ராஜா ராணி'* **இசை:** டி.ஆர். பாப்பா
**பாடியவர்:** எம்.எல். வசந்த குமாரி.

## 23. காதல் புறா...

காதல் புறா காதிலே பேசுவதேனோ
அதன் ரகசியம் ஏதோ
பாசம் கொண்டதும் வீணோ?
பாவை ஏன் பிறந்தேனோ?

தளிர்மேனி சோர்ந்தாள் இளைய ராணி
தாவும் தென்றலே வா... வா...
சோகம் தீர்க்கவே நீ வா.

மான் தோல் வேங்கை வாழ்ந்திடும் காட்டில்
மாங்குயில்தான் கூவிடலாமோ?
பாசம் கொண்டதும் வீணோ?
பாவை ஏன் பிறந்தேனோ?

துயர் மேவும் இருளில் வீழ்ந்தாள் ராணி
தூங்கும் வெண்ணிலாப் பெண்ணே - ஒளி
தூது வந்திடு கண்ணே...

நேசத்தினாலே மோசம் போனேன்
ஆசைக் கனவெல்லாம் பலிக்காதோ
பாசம் கொண்டதும் வீணோ?
பாவை ஏன் பிறந்தேனோ?

**ஆண்டு:** *1954;* **படம்:** *'அம்மையப்பன்';* **இசை:** *டி.ஆர். பாப்பா;* **பாடியவர்:** *எஸ். வரலட்சுமி.*

## 24. பேசும் யாழே...

அவன்: பேசும் யாழே பெண் மானே
வீசும் தென்றல் நீதானே

அவள்: நீலவானே தன்னை மறந்து
நிலவினைப் புகழ்ந்திடலாமோ

அவன்: எழிலே! தமிழ்க் காவியமே
எழுதாத ஓவியமே

அவன்: பேசும் யாழே பெண் மானே

அவள்: யாழே நானென்றால் நாதம் நீதானே

அவன்: நாதத்தில் பேதமுண்டு
நமக்கது வேண்டாமே

இருவரும்: காதல் வாழ்வே கனிரசமே
மாதர் மறவர் உல்லாசமே

**ஆண்டு:** *1953;* **படம்:** *'நாம்'* **இசை:** *சிதம்பரம் ஜெயராமன்;* **பாடியவர்கள்:** *ராஜா - ஜிக்கி.*

## 25. மணமில்லா மலர்...

மணமில்லா மலர் நானம்மா!
மாதர் உலகில் வாழ்வே அறியா
மணமில்லா மலர் நானம்மா!

ஒடிந்தது வீணை நாதமே இனியேது
இடியிதோ வீழ்ந்ததே பூங்கா அழிந்ததே
மணமில்லா மலர் நானம்மா!

வாழ்விலே விஷமே வீசியே மறைந்ததால்
மணமில்லா மலர் நானம்மா!

வாடிடும் கொடியானேன்
சூறாவளிக் காற்றாலே
மகரந்த இதழ்மீது மாசு தோய்ந்து மூடிய
மணமில்லா மலர் நானம்மா!

இன்பச் சுடர் காணேனே
இருள் வீட்டில் தனியானேன்

துன்பப் புயல் அலைமோதி
சோக வாழ்வுச் சோலையில்
மணமில்லா மலர் நானம்மா!

**ஆண்டு:** *1953;* **படம்:** *'நாம்';* **இசை:** *சிதம்பரம் ஜெயராமன்;*

## 26. குறிஞ்சி மலரொன்று...

குறிஞ்சி மலரொன்று குலுங்கி அழைக்குது
குலவிட வருவாய் குளிர் தென்றலே

தென்றலின் சுகத்தில்
தேனிதழ் கலந்து
அன்றிலாய் வாழ்வோம்
இன்பத்தில் திளைத்து

கற்கண்டு தோட்டத்தில் பால்பாய்ந்து
கரும்பு கலப்பையால் ஏர் ஓட்டி
அற்புதமாய் விளைந்த கதிர்மணியே
அணைத்து மகிழ்வோம் கண்மணியே (குறிஞ்சி)

இன்ப நூலுக்கு முன்னுரை எழுதியே வருக
இயல் இசைக் கூத்தென முத்தமிழ் சுவையைத் தருக.
முத்தமிழ் கயல் விழி முக்கனி தனிமொழி
முத்திக்கு ஒரு வழி முத்தமாரி பொழி
(குறிஞ்சி)

அணைத்தால் விளக்கே இருண்டு விடும்
அன்பின் தேகம் துவண்டு விடும்
பிணைத்தாள் நம்மைத் தமிழன்னை - இனி
பிரியேன் என்றும் நானுன்னை
(குறிஞ்சி)

*ஆண்டு: 1982; படம்: 'தூக்கு மேடை'; இசை: சங்கர்-கணேஷ்; பாடியவர்கள்: ஜெயச்சந்திரன், வாணி ஜெயராம்.*

## 27. ஓடையிலே ஒரு நாள்...

ஓடையிலே ஒருநாள் எந்தன்
இதழ்பறித்து முத்தமிட்டான்
இன்ப சுகம் என் சொல்வேன்.

வாடைக் குளிரில் இந்தத்
தேகம் அணைத்த செல்வன்
வருகிறேன் என்று சொல்லிப்
போய் விட்டானடி தோழி

ஏடு படிக்க அமர்ந்தேன் - எந்தன்
எண்ணத்தில் வந்து கலந்தான்
பண்ணிசைக்க யாழெடுத்தேன்
கண்ணெதிரே அவன் நின்றான்
பாய்ந்து தழுவச் சென்றேன்
மின்னல் போல் மறைந்து விட்டான்.

ஆண்டு: 1956; படம்: 'ரங்கோன் ராதா'; இசை: டி.ஆர். பாப்பா

## 28. ஆயர்பாடி கண்ணா...

ஆயர்பாடி கண்ணா நீ
ஆடவாராய் என்னோடு - மாயக்காரா
வா வா வா ஜாலக்காரா
ஓஹோ ஓ ஹோ - ஏ பகவானே பகவானே பகவானே

பாமாவைப் போலவே அழகான ராணி நான்
தாளாத காதலே தணலாக வீசுதே
காணக்கிடைக்காத் தங்கம் பார்
காதல் தெளிக்கும் அங்கம் பார்
மாயக்காரா ஜாலக்காரா ஏ பகவானே
பகவானே பகவானே
வானோடும் மின்னலே இடையாக ஆனதே
தேனூறும் கன்னமே தெய்வீக பானமே
வேலைப் பழிக்கும் விழியைப் பார்
ஆளை மயக்கும் மொழியைப் பார்
மாயக்காரா ஜாலக்காரா ஏ பகவானே
பகவானே பகவானே

ஆண்டு: 1956; படம்: 'ரங்கோன் ராதா' இசை: டி.ஆர். பாப்பா; பாடியவர்: டி.வி. ரத்தினம்.

## 29. மீளா சோகம்

பேசும் யாழே பெண் மானே
வீசும் தென்றல் நீதானே
கேளேனோ இனிமேல் இதுபோல் கீதம்
(பேசும்)

தாளாத் தீச் சுழலில்
தனியாய் வீழ்ந்தீரோ
மீளா சோகம் மீட்டிடும் யாழானேன்
மாளா காதலினால் வாழ்ந்தோமே காதல்
(பேசும்)

பாழும் பேயாக பாரினில் அலைவீரோ
தீரா துன்பம் தீட்டிய ஏடானேன்
மாறா பாசம்தனை மறந்தீரோ நேசம்
(பேசும்)

**ஆண்டு:** *1953;* **படம்:** *'நாம்';* **இசை:** *சிதம்பரம் ஜெயராமன்;* **பாடியவர்:** *ஜிக்கி.*

## 30. வான் மலர்ச் சோலையில்...

வான் மலர்ச் சோலையில்
தேன் மதி காணவே
மாமுகில் ஓடுதே

காற்றில் ஆடும் முல்லைக் கொடியே
துணை தான் இணைந்த நம்வாழ்வில்
ஆனந்தம் காண்போமே இன்றே

ஆசைத்துரையே அழகான ராணி
அணைமீறும் அன்பால் அலைமோதுகிறாள்
அருகே நீ வாராய்

தீயும் அணைந்தது தென்றல் வீசுது
தெவிட்டாத அமுதாய் தேமாங்கனியாய்
புது வாழ்வு கண்டேன்

ஆண்டு: 1956; படம்: 'ரங்கோன் ராதா'; இசை: டி.ஆர் பாப்பா;

## 31. ஒண்ணு கொடுத்தா...

அவன்: ஒண்ணு கொடுத்தா ஒன்பது கிடைக்கும்
உனக்குத் தெரியுமா? உனக்குத் தெரியுமா?

அவள்: ஒன்பதுக்கு வட்டி உடனே கொடுக்க
என்னால் முடியுமா? என்னால் முடியுமா?

அவன்: பெண்ணுக்குச் சலுகை வட்டியில் உண்டு
அசலைப் போடம்மா அசலைப் போடம்மா
கண்ணுக்குள் ஆடும் கனியே மலரே
கன்னம் இதுதாம்மா கன்னம் இதுதாம்மா

அவள்: கன்னத்தில் சித்திரம் கனியிதழ் முத்திரை
எண்ணிக் கொள் தருகிறேன்
திருமணம் பண்ணிக் கொள் தருகிறேன்
இப்ப...

அவன்: ஒண்ணு கொடுத்தா ஒன்பது கிடைக்கும்
உனக்குத் தெரியுமா? உனக்குத் தெரியுமா?

அவள்: ஒன்பதுக்கு வட்டி உடனே கொடுக்க
என்னால் முடியுமா! என்னால் முடியுமா?

அவன்: குளிப்பதில் சுகமோ நினைவில்
களிப்பதில் சுகமோ காதல்
துளிர்ப்பதில் சுகமோ
கேட்பதை அளிப்பதில் சுகமோ

அவள்: இருப்பது வீடு... வீணே பறப்பது ஏனோ
எனக்கும் துடிக்குது புருவம் ஆன
தடுக்குது இதயம்.

**ஆண்டு:** *1966;* **படம்:** *'மறக்க முடியுமா?';* **இசை:** *டி.கே. ராமமூர்த்தி;* **பாடியவர்கள்:** *டி.எம். சௌந்தர்ராஜன், பி.சுசீலா.*

## 32. காகித ஓடம்

காகித ஓடம் கடல் அலைமீது
போவது போலே மூவரும் போவோம்
ஆதரவின்றி ஆழ்ந்திடும் ஓடம்
அதுபோல் ஒன்றாய் மூழ்குதல் நன்றாம்

கோலமும் போட்டுக் கொடிகளும் ஏற்றித்
தேரையும் ஓட்டித் தீயையும் வைத்தான்
காலமும் பார்த்து நேரமும் பார்த்து
வாழ்வையும் ஈந்து வதைக்கவும் செய்தான்

அழுவதைக் கேட்க ஆட்களும் இல்லை
ஆறுதல் வழங்க யாருமே இல்லை
ஏழைகள் வாழ இடமே இல்லை
ஆலயம் எதிலும் ஆண்டவன் இல்லை

தாயின் மடியும் நிலைத்திட வில்லை
தந்தையின் நிழலும் காத்திட வில்லை
ஆறிலும் சாவு நூறிலும் சாவு
அம்மா எங்களை அழைத்திடு தாயே.

*ஆண்டு: 1966; படம்: 'மறக்க முடியுமா?' இசை: டி.கே. ராமமூர்த்தி; பாடியவர்: பி. சுசீலா.*

## 33. பூமாலை நீயே...

பூமாலை நீயே...
புழுதி மண் மேலே வீணே
வந்தேன் தவழ்ந்தாய்?

(பூமாலை)

பாராயோ என் பன்னீர் செல்வமே
சீரோடு வாழ்ந்தோம்
வேரோடு சாய்ந்தோம்.
ராஜாங்கம் போலே வாழ்ந்த
வாழ்வும் வீழ்ந்தே பாழான
எந்தன் வயிற்றில் பிறந்தாய்
ராஜா நீ யேன் பிறந்தாய்

(பூமாலை)

பறவை வீட்டில் நீ பிறந்திருந்தாலும்
பசி நீங்கவே உணவும்
பறந்தோடி வந்திடும்
கோடானு கோடி ஏழை மாந்தர் வாடும்
சீமான்கள் வாழும் நாட்டில் பிறந்தாய்
ராஜா நீயேன் பிறந்தாய்?

(பூமாலை)

ஆண்டு: *1952*; படம்: 'பராசக்தி'; இசை: ஆர். சுதர்சனம்;

## 34. தமிழே தேனே!

தமிழே தேனே கண்ணே தாலேலோ
தங்க ஜோதி வீசும் தீபமே தாலேலோ!

அலைமோதிடும் கடல் போலவே
உனைஈன்ற தாயின் உள்ளமே
நிலைமாறி வாடும் போதிலே
நீதான் வந்தாய் நிலவாகவே

முகில் காணுமோர் மயில் போலவே
உன் கோல முகமும் காணவே
துயர் நீங்கி நானும் ஆடுவேன்
தூங்காத கண்ணே தூங்கய்யா

தமிழைத் தமது உயிர்த்துடிப்பாகக் கருதும் கலைஞர், ஒரு மழலையைத் 'தமிழே' என்று உருவகப் படுத்தியுள்ளமை சிறப்பாக உள்ளது.

**ஆண்டு:** 1956; **படம்:** 'ரங்கோன் ராதா'; **இசை:** டி.ஆர். பாப்பா;

## 35. சின்னப் புது மலரே!

சின்னப்புது மலரே
சிங்கார அகல் விளக்கே
கன்னற் தனிச் சுவையே
கற்கண்டே கனிரசமே

(சின்ன)

செந்நெல் மணிக்கதிரே
தித்திக்கும் செங்கரும்பே
செந்தமிழாள் ஈன்றெடுத்த
செல்வக் களஞ்சியமே

(சின்ன)

காவிரியின் தென் பாங்கே
கற்பூரப் பெட்டகமே
பூவிரித்த சோலையிலே
பொங்கும் புது மணமே

(சின்ன)

நீ இராவிடம் இருள் சூழும்
என்ற நிலை தந்த
திராவிடப் பொன்னழகி
வாழ்ந்திடுவாய் விண்ணமுதே

(சின்ன)

ஆண்டு: *1954;* படம்: 'அம்மையப்பன்'; இசை: டி.ஆர். பாப்பா;

## 36. நீலக்கடல்...

நீலக் கடல் பாரு பாப்பா - அதில்
நீந்தி விளையாடு பாப்பா

வெள்ளி மணல் படுக்கையிலே - பாப்பா
துள்ளி விளையாடு பாப்பா
ஓடி விளையாடு பாப்பா - நீ
ஒயிலாக நடமாடு பாப்பா

சாய்ந்தா டம்மா சாய்ந்தாடு
சந்தனக் கிளியே சாய்ந்தாடு
அழகு மயிலே சாய்ந்தாடு

(சாய்)

**ஆண்டு:** *1954;* **படம்:** 'அம்மையப்பன்'; **இசை:** டி.ஆர். பாப்பா;

# நகைச்சுவைத் தமிழ்

## 37. வாங்க வாங்க...

வாங்க... வாங்க... வாங்க
எல்லோரும் இங்கே வாங்க
டிக்கெட்டு வாங்க வாங்க
இன்றிரவு மிக நன்றிரவு
இணையில்லாத இன்ப இரவு

ஒருவன்: தரை ஒண்ணு
அவள்: அரை ரூபா
அவன்: கொடு கொடு இந்தா
அவள்: தரை அரை ரூபா
கறை படிந்த தரை அரைரூபா
ரத்தக் கறை படிந்த
தரை அரை ரூபா
(இன்)

அடுத்தவன்: ஏம்மா இன்னிக்கு என்னா ட்ராமா?
அவள்: அடவெங்கட்ராமா க்யுவிலே நில்லு!
அவன்: எப்படித் தெரியும் என்பேரு?
செப்படி வித்தை கற்றவளோ?
அவள்: தரை அரை ரூபா பெஞ்சு ஒண்ணு
பேக் பெஞ்சு மூணு!...
ஏ காலி
காலீ!... காலீ!...
நாற்காலி அஞ்சு ரூபா

அவன்: கொஞ்ச ரூபா சொல்லு

அவள்: வஞ்சகனே போடா! ஏடா... மூடா
வீணே சாகாதேடா

அவன்: ஆ!

அவள்: எங்க நாடகத்தில் இந்த
வசனங்களைக் கேட்க
கொஞ்ச ரூபாயா ஐந்து ரூபா தா!
அழகான நாடகம் எழிலான காட்சிகள்
அனல் வீசும் பேச்சுகள்
ஆடல்... பாடல்... ஊடல்... கூடல் எல்லாம் காண
இங்கே வாங்க... வாங்க...
டிக்கெட்டு வாங்க வாங்க

அவள்: மூணு வயதுக்குமேல் முழு சார்ஜு
இடம் மாறி உட்கார்ந்தால் டபுள் சார்ஜு
டர்னிங் சீனில் அடிக்கக் கூடாது டார்ச்சு
(மூணு)

ஒரு கிழவன்: ஐம்பத்து மூணுக்கு?

அவள்: ஈஸி சேர்!

ஒருத்தி: ஏம்மா!, பெண்களுக்குத் தனி இடம்உண்டா?

அவள்: பிள்ளைகள் போட ஏணையும் உண்டு!...
பீடா... சிகரெட்... பாக்கு வெத்திலை
சோடா கலர் ஆரஞ்சு!

ஒரு குள்ளன்: ஃப்ரியா?

அவள்: ட்ரீயோ டேயன்னா டேயன்னா? போய்யா
(மூணு)

புதிய ஆள்: ஏம்மா அரை டிக்கட் உண்டா?

அவள்: யப்பா... உமக்கு முழு டிக்கட்டும் இல்லை!

அவன்: ஏனாம்?

அவள்: ஹவுஸ் புல்!

**ஆண்டு:** *1956;* **படம்:** *'ராஜா ராணி';* **இசை:** டி.ஆர். பாப்பா
**பாடியவர்:** எம்.எல். வசந்தகுமாரி.

## 38. வருவாய் வருவாய்...

ஹா ஹா
வருவாய் வருவாய்
வைபோக சுந்தரியே
சை போக சௌந்தரியே!
சைரந்திரியே... கண்ணே வருவாய்

கீசகன் ஆசை கொண்ட கிச்சிலிப் பழமடி நீ
காச நோய் போல வந்த காதலுக்கு மருந்தடி நீ

ஆணழகா மம்முதா ஆசை கொண்ட சீசகா!
கீசகா!...... டேய்
கிறுக்குத் தனமாய் வந்து மீசையை
முறுக்கிவிட்ட குரங்கே பெரிய குரங்கே
எட்டு திக்கும் நடு நடுங்க
முரசு கொட்டும் பீம சேனனிடம்
வாலாட்டமா? வாலாட்டமா?

**ஆண்டு: 1953; படம்: 'நாம்' இசை: சிதம்பரம் ஜெயராமன்;**

## 39. லீலா...

அவன்: லீலா!
லாலீ!
அது போலீ

கண்ணற்றத் தகப்பனுக்குப் பெண்ணாகப் பிறந்தவளே!
எண்ணற்ற பொய் சொல்லி
என்னையே மாற்றிய என் தங்கமே

பூனை கண்ணை மூடிக் கொண்டால்
பூலோகம் இருண்டு போகுமோ மியாவ் மியாவ்
வானை நோக்கித் திரையைப் போட்டால்
வட்ட நிலாவும் மறைந்து போகுமோ

(கண்)

கெட்டிக்காரன் பொய்யும் புரட்டும்
எட்டு நாளைக்கு இந்தக்
கட்டிக் கரும்பின் பொய்யும் புரட்டும்
எத்தனே நாளைக்கு?...ஆ!

(கண்)

அவள்: (வசனம்)
நான் ஒண்ணும் பொய் சொல்லலே
எல்லாம் உண்மைதான்...

அவன்: அரிச்சந்திரன் வீட்டுக்கு அடுத்த
வீட்டுப் பெண்ணே
அநியாயமாய் உண்மை சொல்வதிலே உனக்கு
அவனியிலே நிகர்யாரு கண்ணே!

அவள்: (வசனம்)

ராஜா!

அவன்: ராணி!

அவள்: ஆ! (வியப்பு)

அவன்: சீட்டுக்கட்டு ராணி போலே
சிக்கி விட்டாய் பெண்மயிலே!
வாட்டம் இல்லாமலே
வாழலாம் பூங்குயிலே
கிளாவர் ராணி உனக்கு

என்ன வேணுமின்னு கேளு
ஆட்டின் ராணி போல் ஆடு
டைமன் ராணி போல பாடு
அடி இஸ்பெட்ராணி
ஏனிந்த சோகமோ
என்மேல் என்ன கோபமோ?
உண்மை சொன்ன பாபமோ
உன் மனதில் என்ன தாபமோ?

**ஆண்டு:** *1956* **படம்:** *'ராஜா ராணி'* **இசை:** *டி.ஆர்.பாப்பா;* **பாடியவர்:** *எஸ்.சி. கிருஷ்ணன்.*

ஆய்வக
நூலகம்
சென்னை-18.

## 40. நீர் மேல் நடக்கலாம்...

அவன்: நீர் மேல் நடக்கலாம்
நெருப்பிலே படுக்கலாம்
நிலைதடுமாறினால்
நினைத்ததைப் பேசலாம்.

அவர்கள்: உலகம் சுத்துது எதனாலே - நம்
உடம்பு சுத்துது அதனாலே
நம்ப உடம்பு சுத்துது அதனாலே

அவன்: கலகம் வருவது எதனாலே
கலயம் பொங்குது அதனாலே
கலகம் வருவது எதனாலே
கலயம் பொங்குது அதனாலே

சொர்க்கம் தெரியுது எதனாலே
மயக்கம் வருகுது அதனாலே
சொர்க்கம் தெரியுது எதனாலே

அவர்கள்: மயக்கம் வருகுது அதனாலே (உலகம்)

அவன்: கண்ணைக் கவருது எதனாலே - இவ
கன்னிப் பெண்ணு அதனாலே
கண்ணைக் கவருது எதனாலே

அவர்கள்: இவ கன்னிப் பெண்ணு அதனாலே

அவன்: கன்னிப் பெண்ணு...ம்...ம்...
கன்னத்தில் ஒண்ணு

அவள்: உலகம் சுத்துது எதனாலே

அவர்கள்: நம்ம உடம்பு சுத்துது அதனாலே

(உலகம்)

**ஆண்டு:** ***1963*** **படம்:** 'காஞ்சித் தலைவன்'; **இசை:** கே.வி.மகாதேவன்; **பாடியவர்கள்:** ஏ.எல். ராகவன், எல்.ஆர். ஈஸ்வரி குழுவினர்.